முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1367

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.06.2023, செவ்வாய்கிழமை

1. வரம் பெற்று என் சக்தியாக
   வையகத்தை காப்பேன் என  உறுதிகொண்டு
   அறம் வளர்க்கும் ஆறுமுக அரங்கனே
   ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரைஆசி

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 12 ம் நாள், 27.06.2023, செவ்வாய்கிழமை)

2. ஆசிபெற்று உன் கரம்பட இந்த கலியுகத்தில்
   அன்பர்கள் படை மிகுந்து
   உலகமெல்லாம் வாசி வென்ற நிலை அடைந்து
   ஞானிகளாக வருங்காலம் ஞானிகள் நிறைந்த சபையாக
3. ஆகவே உலகம் மாற்றம் கண்டு
   அற்புதம் நிகழும் இந்த கலியில்
   கலிதன்னை இடராக உள்ள சூழலை
   கட்டாயம் அரங்கன் உன் தர்மத்தால் வென்று
4. பழிபாவம் இல்லாத ஞான பூமியாக
   பரோபகாரமிக்க மக்களை உருவாக்கி அரங்கன் நீ
   அரங்கன் நீ மாற்றம் செய்ய இருக்க
   அப்பனே உன் தர்மமும் தொண்டர்களும்
5. அளவிலா பெருகி உலகமெல்லாம்
   காப்பான உன் கொள்கையை
   கொண்டு சென்று கலியுகத்தில்
   உன் நாமஜெபத்தை உலகோரெல்லாம் விளம்ப
6. விளம்பவே வகைசெய்து சடுதி இந்த உலகம்
   விரைந்து ஞானயுகமாற்றமாக
   கலகம் துன்பமில்லாத கண்ணியமிக்க
   ஞானவான்கள் ஆளுமையாக

7. ஆகவே மாற்றி அற்புதம் நடத்தும்
அரங்கன் வழி உலகோர் வர  இந்த மாற்றங்கள்
வரமாக ஆறுமுகன் யான்தர வையகம் வளமும் நிறைவும்
வல்லமையான ஆளுமையும் பாதுகாப்பும் பெற்று சிறக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–